# கோட்டை முகாம் மூடப்படாது

[illegible] விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 24-1-86 வெள்ளி (தை 11 ஐ. அவ். 13) முழக்கம் 849

## அமைச்சர் லலித் அறிவிப்பு

கோட்டை இராணுவ முகாம் எந்தக் காரணம் கொண்டும் மூடப்படமாட்டாது என்றும், அதனை மூடினால் தமிழ்த் தீவிரவாதிகட்கு எல்லையைப் பிரித்துக் கொடுத்ததற்குச் சமனாகும் என்றும் அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். "தீவிரவாதிகளின் மோட்டர் ஆயிரம் கிலோ மீட்டர் செல்ல கூடியது. இதனைத் தடுக்கவே புதிய சட்டம் கொண்டுவரப்பட்டது" எனவும் அவர் சென்னார். இதனை நீக்கவேண்டுமென ஊர்வலங்கள், கடையடைப்புகள் நடத்தப்படுகின்றன. மகஜர்களும் அனுப்பப்பட்டுள்ளன என்றும் தெரிவித்த அமைச்சர், இதனை ஏட்டு தாமும் ஜனாதிபதியும் கவலை கொண்டுள்ளபோதிலும், வாபஸ் பெறமுடியாதென்று சொன்னார். "பாதுகாப்பு வலயச் சட்டம் அமுலுக்கு வந்துள்ள போதிலும், இப்பகுதிக்குள்ளிருக்கும் மக்களை வெளியேறச சொல்லவில்லை. அவாகவ் ஒழுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்" என்றும் தமது பேச்சில் குறிப்பிட்ட அமைச்சர் அத்துலத் முதலி, தமிழர் பிரச்சினைக்கு அரசியல் ...6 ஆம் பக்கம் பார்க்க

# தெல்லிப்பளையில் துப்பாக்கிச் சூடும் பீரங்கி தாக்குதலும்

## 'அவ்ரோ' விமானத்துக்கு சேதம்

பலாலியில் நேற்றுக்காலை இடம்பெற்ற சம்பவங்களின்போது அவ்ரோ விமானமொன்று சேதத்துக்குள்ளானதாகத் தெரியவந்துள்ளது. 42 பயணிகளுக்கான ஆசன வசதிகளைக் கொண்ட விமானம் பலாலி விமான நிலையத்தில் இறங்கும்போது நடத்தப்பட்ட தாக்குதலினால் இதற்குச் சேதம் ஏற்பட்டதாம். இதனால் இவ்விமானம் அங்கிருந்து புறப்பட முடியாத நிலையிலிருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

# 9 பேர் பலி; கோப்ரலும் மரணம்!

## போராளிகளின் எதிர்த்தாக்குதலினால் சீருடையினர் முகாம் திரும்பநேர்ந்தது

(வயாவிளான், ஏழாலை, அளவெட்டி நிருபர்கள்)

நேற்று அதிகாலை ஆறுமணிக்கு முன்னதாக பலாலி முகாமிலிருந்து வயாவிளான் சந்தி வழியாகவும், விமான நிலைய வழியாகவும் தெல்லிப்பளை, கட்டுவன் பகுதியைச் சுற்றி வளைத்த ராணுவத்தினர் அங்கு மேற்கொண்ட துப்பாக்கிச்சூட்டினாலும். பின்னர் முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட பீரங்கித் தாக்குதலகளினாலும் பொதுமக்களில் ஒன்பது பேர் பலியாகியுள்ளனர். யாழ்., தெல்லிப்பளை ஆஸ்பத்திரிகளில் பதினெட்டுப்பேர் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வழிமொழியே போராளிகள் மேற்கொண்ட எதிர்த்தாக்குதலகளினால் ராணுவ கோப்ரல் கருணதிலகா மரணமானதாகவும், நால்வர் படுகாயமடைந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது தாக்குதல அதிகரித்ததால சீருடையினர் பின்வாங்கிச் சென்றனராம.

எட்டுக் கவசவாகனங்கள் பின்தொடர சுமார் முன்னூற்றைம்பது ராணுவத்தினர் இவ்வேட்டையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டது ஹெலிகப்டர் பாதுகாப்பும் இவர்களுக்கு வழங்கப்பட்டது. ...6 ம பக்கம் பார்க்க

## தந்திரிமலை கண்ணிவெடி; ராணுவ வாகனம் பிளந்தது

(வவுனியா)

மன்னார் மதவாச்சி வீதியிலுள்ள தந்திரிமலைச் சந்தியில் நேற்று கண்ணிவெடி ஒன்றில் கவசவாகனம் ஒன்று சிக்கியதில் பலர் இறந்திருக்கலாமென ஊர்ஜிதப்படுத்தப்படாத செய்திகள் தெரிவிக்கின்றன இச்சம்பவம் நடந்த சில நிமிடங்களின் பின் சனநடமாட்டம் குறைந்த தந்திரிமலை பகுதியை நோக்கி வவுனியா விமானப்படை முகாமிலிருந்து இரு ஹெலிகப்டர்கள் பறந்தன.

இச்சம்பவத்தையடுத்து நேற்று மன்னார் மதவாச்சி வீதியில் வாகனப்போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதமடைந்தன. வவுனியாவிலிருந்து அனுப்பப்பட்ட தபால் பொதிகளும் குறித்த பகுதிகளுக்குச் செல்லாது திரும்பி வந்தன.

பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கை ஒன்றில் செட்டிகுளம் பாதையில் புதைத்துவைக்கப்பட்டிருந்த எட்டு கண்ணிவெடிகளை மீட்க பாதுகாப்புப்படையினர் சென்றசமயம் பதுங்கியிருந்த தீவிரவாதிகள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொண்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இது அரசு அறிக்கை

பலாலி விமான நிலையத்தையும், விமானங்களையும் தீவிர ...6 ம் பக்கம் பாரக்க

## கொலை நடந்த விதத்தை சிறிய தகப்பன் கூறுகிறார்

(வயாவிளான்)

நேற்று தெல்லிப்பளையில் அட்டகாசம் நடந்த போது வயாவிளான் சந்தியில் 'காவலுக்காக' விடப்பட்ட சுமார் இருபத்தைந்து சீருடையினர் தபால் நிலையத்தின் முன்னால் உள்ள வீட்டில் ஒழித்திருந்து நால்வரைப் பிடித்து இருவரை சுட்டனர். இறந்த சுப்பிரமணியம் கதிர்காமநாதனின் சிறிய தகப்பனாரும், சீருடையினரால் பிடித்து சில மணி நேரம இருத்தி வைக்கப்பட்டவரும் மயிலிட்டி அரசினர் வைத்தியசாலையன் அட்டெண்டனாகவும் தொழில் புரிபவருமான திரு. வல்லைபுரம் கந்தசாமி பின் வருமாறு நடந்த சம்பவத்தை ...6 ம் பக்கம் பார்க்க

## யாழ். ஆஸ்பத்திரியில் 11பேர் காயங்களுடன் அனுமதி

(வண்ணார்பண்ணை)

தெல்லிப்பளையில் நேற்றுக் காலை இடம்பெற்ற இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு செந்தில்குமாரி (19), மயிலணி யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார். இவரது சடலம் பின்னர் எடுததுச் செலலப்பட்டது.

நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் சூட்டுக் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டுள்ளவர்கள் விபரம வருமாறு:-

எஸ். ஞானசோதி (28) மயிலணி, சந்திரலக்சுமி (40) குப்பிளான், பிரேமராணி (21) மயிலணி, கௌரிபாலன் (11) ...6 ம் பக்கம் பாரக்க

## 4-ம் நாளாக ராணுவ சோதனை

(வவுனியா)

நேற்று முன்தினம் வரை நான்காவது நாளாக வவுனியா —6ஆம் பக்கம் பார்க்க

## யாழ். செயலகம் நேற்றும் இயங்கவில்லை

## அரசாங்க அதிபர் அன்னையர் முன்னணியின் மகஜரை பெற்றபின்னர் வெளியேற்றம்

யாழ். அரசாங்க அதிபர் திரு.எம் பஞ்சலிங்கம் கச்சேரியிலுள்ள தனது அலுவலகத்துக்குச் செல்வதற்கு அன்னையர் முன்னணியினரால் நேற்று அனுமதிக்கப்பட்டார். ஆனால் கச்சேரிக்கு வெளியே மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் தெரிவித்த கடும் ஆட்சேபனையால் சில மணி நேரத்திலேயே அரசாங்க அதிபர் தமது அலுவலகத்திலிருந்து வெளியேற நேர்ந்தது.

அன்னையர் முன்னணியால் ஜனாதிபதிக்கு அனுப்பப்படவுள்ள மகஜரைப் பெற்றுக் கொள்வதற்காகவே அரசாங்க அதிபர் கால்நடையாக காலை சுமார் எட்டு மணியளவில் கச்சேரியை வந்தடைந்தார். மகஜரை வீதியில் வைத்துப் பெற்றுக் கொள்வது பொருத்தமாக இருக்காது என அரசாங்க அதிபர் தெரிவித்ததால் அவர் உள்ளே செலவதற்கு அன்னையர் முன்னணியினர் அனுமதித்ததுடன் அவர்களின் முக்கிய பிரமுகர்கள் சிலரும் மகஜரைக் கையளிப்பதற்காக உள்ளே சென்றார்கள்,

இதனைத் தொடர்ந்து கச்சேரிககு வெளியே மறியலில் ஈடு ...6 ம் பக்கம் பார்க்க

## கல்விக்கந்தோர் முன்னாலும் நேற்று மறியல ஆரம்பம்

(கல்வியங்காடு)

யாழ். கல்விக் கந்தோருக்கு முன்னால் நேற்றுக் காலை ஒரு மணி தொடக்கம் பிற்பகல் இரண்டு மணி வரைக்கும் மறியல் போராட்டம் நடத்தப் பட்டது இதனால் கல்விக் கந்தோரில் எந்த விதமான கருமங்களும் ஆன்று நடைபெறவில்லை.

நல்லூர் சங்கிலியன் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தினரும் பாடசாலை மாணவ மாணவிகளும இம் மறியல் போராட்டத்தை நடத்தினர். "அகதிகள், அனாதைகள் அடிமைகள் என்ற நிலையிலிருந்து —6ஆம் பக்கம் பாரக்க

## மாங்குளம் சூட்கேஸினால் லொறி ராணுவ முகாமில்

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பிற்குச் சென்ற லொறி ஒன்று தற்பொழுது அனுராதபுரம் இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி லொறியை அனுராதபுரத்தில் இராணுவத்தினா சோதனையிட்ட சமயம் அதனுள் இருந்த சூட்கேஸ் ஒன்றினுள் அதிகளவாக தங்க ஆபரணங்கள் இருநதனவாம். மேற்படி சூட்கேஸ் மாஙகுளம் ...6ஆம் பக்கம் பார்கக

## 3 இளைஞர் விடுதலை

(கிளிநொச்சி)

கடந்த தீபாவளித் தினத்தன்று விசுவமடுவில் ஆயுதப் ...6ம பக்கம் பாரக்க

தமிழ்பேசும் மக்களின் அபிமானம் பெற்றது ஈழமுரசு

# தீவுப்பகுதியில் பணிபுரிய புதிய ஆசிரியர்கள் தயாரா?

## கல்விச் சேவைக்குழு உதவும் என அறிவிப்பு

ஊர்காவற்றுறைத் தொகுதியில் இருந்து ஆசிரியர் பதவிகளுக்குத் தெரிவானவர்கள், அவர்கள் தொகுதியில் உள்ள கஷ்டப் பிரதேசத்தில் பணிபுரிய விரும்பினல் அதற்குரிய ஒழுங்குகளைச் செய்து கொடுக்க முடியுமென்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்துள்ளார்.

ஆசிரிய முன் பயிற்சி நெறியை முடித்துக் கொண்டுள்ள ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த அல்லது பிறப்பிடமாகக் கொண்டுள்ளவர்கள் அத்தொகுதியில் உள்ள நெடுந்தீவு, எழுவைதீவு, அனலைதீவு ஆகிய இடங்களில் பணிபுரிய விருப்பின் அவர்களுக்கு உதவ கல்விச் சேவைகள் குழு முன்வந்துள்ளது.

ஊர்காவற்றுறைத் தொகுதியில் உள்ள ஆசிரிய பற்றுக் குறை நிலைமையை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் த. மகாசிவம் அவர்கள் கல்விச் சேவைகள் குழுச் செயலாளர் எம். எச். எச். ஆரியரத்தின அவர்களுக்கு எடுத்து விளக்கியமையைத் தொடர்ந்தே இம்முடிவை கல்விச் சேவைக்குழு எடுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைத் தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களை இவ்விடயமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் த. மகாசிவம் இச்செய்தியில் கேட்டுள்ளார்.


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர் செட்டித்தெருவில் 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. முகவரி:- S. கனகரத்தினம், 547, பருத்தித்துறை வீதி, நல்லூர். R/16368

### விற்பனைக்கு

கருவாடுக்குத் தேவையான அரைத்த உப்புக்தூள் (50 கி. மூடை) விற்பனைக்குண்டு.
M G M Forage Stores, No. 208, 1st Cross St, and 781, K K. S. Rd., Jaffna
R/16370

### விற்பனைக்கு

ரோசா செடிகளுக்கான 'அதி விசேஷ உரம்' எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
M. G. M. Forage Stores No. 208, 1 st Cross St, Jaffna. T. P. 22611. R/16371

### தவறிவிட்டது

பசுபதி தனுக்கோடி நெடுந்தீவு மேற்கு என்ற விலாசமுடைய எனது அடையாள அட்டையைக் கண்டெடுப்பவர்கள் தயவுசெய்து ஈழமுரசுக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். R/16366


## இறுதி ஆட்டம்

இணுவில் என். இ. சி. விளையாட்டுக்கழகம் நடாத்திய 17 வயதுக்குட்பட்டோருக்கான மட்டுப்படுத்தப்பட்ட இருபது ஓவர் கிரிக்கட் போட்டிகளில் கொக்குவில் பெரடெனியா விளையாட்டுக்கழகமும் பொற்பதி விளையாட்டுக்கழகமும் இறுதி ஆட்டத்தில் ஆட தகுதி பெற்றுள்ளன.

இறுதி ஆட்டம் 26ம் திகதி மாலை 3 மணிக்கு இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகத் திடலில் நடைபெறும்.

## ஆஸ்பத்திரியில் பால் நிலையம்

யாழ். அரசினர் போதனா வைத்தியசாலையில் புதிதாக பால் விற்பனை நிலையமொன்று இன்று காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்படவிருக்கின்றது.

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினால் அமைக்கப்பட்டுள்ள இந் நிலையத்தை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் சி. எஸ். நச்சினார்க்கினியன் திறந்து வைப்பார்.

## அதிகாரி வீட்டில் நடந்த கொள்ளை

கந்தர் மடத்திலுள்ள நல்லூர் உதவி அரசாங்க அதிபரின் இல்லத்திலிருந்து சுமார் பதினேழு பவுண் நகைகளும் பணமும் இனந்தெரியாதவர்களினால் கொள்ளையடித்துச் செல்லப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் உதவி அரசாங்க அதிபரும், அவரது மனைவியும் வீட்டில் இல்லாத நேரத்திலேயே நண்பகலில் வீட்டின் பின் கதவை உடைத்து வந்த திருடர்கள் பதின்மூன்று பவுண் தாலியையும், நான்கு பவுண் சங்கிலி ஒன்றையும், சுமார் 2,300 ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளார்கள்.

இது சம்பந்தமாக எவரும் கைது செய்யப்பட்டதாகவோ விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாகவோ தெரியவில்லை.

## ஆராதனை

(நல்லூர்)

யாழ்ப்பாணம் கிறிஸ்தவ ஐக்கிய சங்கத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமை மாலை 4 மணியளவில் யாழ். வை.எம் சி. ஏ. மண்டபத்தில் கிறிஸ்தவ ஐக்கிய வார ஆராதனை நடைபெறவிருக்கிறது.

இவ்வாராதனையில் றோமன் கத்தோலிக்க சபை, அங்கிலிக்கன் சபை, மெதடிஸ்தசபை, அசெம்பிளி ஒவ் கோட் சபை ஆகியவற்றைச் சேர்ந்த பிரமுகர்களும் குருமாரும் கலந்து கொண்டு ஐக்கிய வார ஜெபங்களை ஏற்றெடுத்து ஆராதனையை ஒப்புக் கொடுப்பார்கள்.

இந்த ஆராதனைக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண கிறிஸ்தவ ஐக்கிய சங்கச் செயலாளர் அருட்திரு. யே. சர்வானந்தன் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.


'மல்ரி சேவிசஸ்' வழங்கும்

## பன்முகச் சேவைகள்

⌘ செயலகச் சேவை: தமிழ், ஆங்கிலத் தட்டச்சு, றோனியோ வேலைகளும் கடிதத் தொடர்புகள், தொடர்பான ஆலோசனைகள உட்பட சகல விதமான செயலகச் சேவைகளும்

⌘ தொலைபேசி சுத்தப்படுத்தும் சேவை: தூசி, அழுக்கு, துர்நாற்றம் நீக்கி, தூய்மையுடனும். மெருகுடனும், தொல்லையற்றும் தொலைபேசிக் கருவிகள் இயங்கிட, திணைக்கள அனுமதியுடன் செயற்படும் சேவையாகும்.

⌘ திருமண சேவை: திருமணம் நிறைவேறும்வரை எவ்வித கட்டணமும் அறவிடாது, கண்ணியமான முறையில், தொடர்பு கொள்பவர்களின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் அமைய, கல்யாணப் பொருத்தங்களை ஏற்படுத்திக் கொடுப்பதையே நோக்கமாகக் கொண்டு இயங்குவது.

⌘ அஞ்சல் வழி ஆங்கிலக் கல்விச் சேவை: இச்சேவை மூலம், மாணவ, மாணவியர், பல்துறைகளிலும் பணிபுரிவோர், அயல்நாடு செல்லவிருப்பவர்கள், அறிவை விருத்தி செய்ய விரும்புபவர்கள் ஆகிய அனைவரும் வீட்டிலிருந்தபடியே விரைவாகவும் இலகுவாகவும் தபால் மூலம் ஆங்கிலம் எழுத, வாசிக்க, பேசக் கற்றுக்கொள்ளலாம்.

⌘ தரகுமுகவர் சேவை: காணி, வீடுவளவு, கடைகள், கட்டடங்கள், ஆகியனவற்றை விற்பதற்கோ, வாங்குவதற்கோ, வாடகைக்கு அல்லது குத்தகைக்குக் கொடுப்பதற்கோ விரும்புபவர்களுக்குத் தரகு முகவர்களாகச் செயற்படுவோம்.

⌘ பிரயாண சேவை: வெளிநாட்டுப் பிரயாண ஒழுங்குகள், பயண ஆலோசனைகள் ஆகியவற்றுடன் கடவுச் சீட்டுத் தொடர்பான சகல வேலைகட்டும் உதவுவதோடு ஜோர்டான், கட்டார் ஆகிய நாடுகள் உட்பட மத்திய கிழக்கு நாடுகளுக்கு சாரதிகள், பொது உதவியாளர்கள் போன்ற தொழிலாளர் தர வேலைவாய்ப்புடனான பிரயாணங்களையும் நம்பிக்கையாளர்கள் மூலம் ஒழுங்கு செய்வோம்.

தரமான சேவைகள்-குறைவான கட்டணங்கள்:

விபரங்களுக்கு:-

### மல்ரி சேவிசஸ்

37 (351), மணிக்கூட்டு வீதி,
(வெலிங்டன் சந்திக்கு அருகாமையில்)
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22762.

B/1018



## சேவை

சகல இன றேடியோ, ரெலிவிசன், வீடியோ டெக்,

அன்ரனாமீளப்பொருத்துதல், உள்ளூர் ஒலிபரப்பு தெளிவாகப் பார்க்கக் கூடிய அன்ரனா அமைத்து பொருத்துதல், என்பன உடன் செய்து கொடுக்கப்படும்.

வீட்டு மின்சாரவேலை, மின்சார பொருட்கள் திருத்துதல் என்பனவும் செய்து கொடுக்கப்படும்.

விபரங்கட்கு:

### JAFFNA TECHNICAL INSTITUTE

ஸ்ரான்லி வீதி,
(றெயில்வே கடவையருகாமை)
யாழ்ப்பாணம்.

வங்களாவடி,
வேலணை.

சேச் அருகாமை
பண்டத்தரிப்பு.

B/1030


## பிறந்தநாள் வாழ்த்து

✻ எழுதுட்டுவாள், செல்வநாயகம் காலை தம்பதியின் மகள் துஷ்யா இன்று தனது மூன்றாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ குருநகர், அன்ரனிதாஸ் சரோஜா தம்பதியின் மகள் சில்வக்குயின் இன்று தனது பத்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ உசன், கந்தையா பாக்கியம் தம்பதியின் மகள் ராஜினி இன்று தனது பதினொராவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

## வள்ளுவர் அறிவக நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

பலாலி வள்ளுவர் அறிவகத்தின் பொதுக்கூட்டம் திரு. சோ. ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவாகினர். தலைவர் திரு. சி. ஜெயரத்தினம், உப-தலைவர் திரு. வி. சிவயோகச்சந்திரன், செயலாளர் திரு. இ. கணேசலிங்கம், உப-செயலாளர் திரு பொ. நாகராஜா, பொருளாளர் திரு. இ. முருகையா, களஞ்சியப் பொறுப்பாளர் திரு. வை. கதிரமலைநாதன். பதினைந்து பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

## பலாலியில் சுகாதாரக் குழு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

பலாலி கிராமோதய மக்கள் சுகாதாரக் குழுவின் ஒரு வருடப் பூர்த்தியையொட்டி அறிவுப்போட்டிகள் நடத்தப் படவுள்ளன.

பலாலி சென். செபஸ்ரியார் கேவில் முன்றலில் எதிர்வரும் புதன்கிழமை திரு. மீ. ஆகபிற்றர்ஸ் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் தெல்லிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஆர். தெய்வேந்திரனும், பலாலி பங்குத்தந்தை ரி. இ. தேவராஜனும் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

மக்கள் சுகாதாரக் குழுச் செயலர் திரு. சி. சுப்பிரமணியமும் (தபாலதிபர், பலாலி), திரு. இ. கணேசலிங்கமும் விழா ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

# யாழ்நகர வீடொன்றில் பட்டப்பகலில் கொள்ளை

(வண்ணார்பண்ணை)

யாழ்நகரிலுள்ளவீடொன்றில் நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் துணிகரக் கொள்ளை நடைபெற்றுள்ளது. வீட்டில் கணக்கெடுப்பதாகக் கூறி இந்தக் கொள்ளை இடம்பெற்றது

யாழ். பிரப்பங்குளம் ஒழுங்கையிலுள்ள மகாலிங்கம் என்பவரது வீட்டில் நேற்று பகல் ஒருமணியளவில் ஆயுதங்களுடன் வந்த ஐவர் இக்கொள்ளையை நடாத்தியுள்ளனர்.

வீட்டார் கோவிலுக்கு சென்ற பின்பு இங்கு வந்த இவர்கள் அங்கிருந்த வயோதிபர் ஒருவரைக் கட்டிவைத்துவிட்டு இதனை செய்தனர்.

கொள்ளையர்கள் பத்தாயிரம் ரூபா பெறுமதியான கசட் றேடியோக்கள், கைக்கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், ரொக்கப் பணம் இரண்டாயிரம் ரூபா என்பவற்றை எடுத்துச் சென்றுள்ளனர். அங்கிருந்த இமிற்றேசன் நகையையும் பவுண் என கொண்டு சென்றுள்ளனராம்.

## வவுனியாவில் கடும் சோதனை

(வவுனியா)

கவச வாகனங்கள் ஜீப் வண்டிகள் சகிதம் வவுனியாவிலுள்ள கச்சேரிச் சந்தி, மன்னார் றோட் சந்தி ஆகிய இடங்களில் மூன்றும் நாளாக நேற்று முன்தினம் கடும்சோதனை மேற்கொள்ளப்பட்டது.

பற்றிக் சாரம் அணிந்திருந்தவர்கள் படையினரால் கடுமையாக விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு கடுமையாக சோதனையிடப்பட்டன.


வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

### KLEEN KHUT

தரமானபோட்டோஸ்ரற் பிரதிகளை பெற்றிட நாடுங்கள்!

### கிளீன் கட்

239, மின்சார நிலைய வீதி,
(ஆஸ்பத்திரி பின்புறம்)
யாழ்ப்பாணம்.
B/1020



## சவுதிக்கு ஆட்கள் தேவை

சவுதிக்கு ஆட்கள் தேவை உடன் வரவும்.

BANK, HOSPITAL, AIRPORT, ஆகிய இடங்களுக்கு கிளீனேஸ் தேவை. பின் கண்ட விலாசத்துக்கு வரவும்.

R/16369

**A. மகேந்திரன்**

155, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.

குறைந்த செலவில்

# கூடிய போஷாக்கை நாம் தேடிக்கொள்ளல் அவசியம்

(வேலணை)

"போஷாக்கான பிள்ளைகளினால்தான் நாட்டின் எதிர்காலத்தை வழிநடாத்திச் செல்லமுடியும். உடல் ஊனமுற்றோ, வளர்ச்சி குன்றிய நிலையில் இருந்தால் அவர்களினால் பெற்றோருக்கோ அன்றி நாட்டிற்கோ பயன் ஏதும் கிடையாது. எனவே தாய்மார்கள்பிள்ளைகளுக்குபோஷாக்கான உணவு வகைகளை கொடுத்து அவர்களை திடகாத்திரமானவர்களாக வளர்த்தெடுக்கவேண்டும்.

மேற்கண்டவாறு வேலணை செட்டிபுலத்தில் போஷாக்கு நிலைய நலன்புரிச்சங்க கூட்டமொன்று நடைபெற்றபோது அதற்குத் தலைமை வகித்து உரையாற்றிய சுகாதார மேற்பார்வையாளர் திரு என்.விஜயரட்ணம் அவர்கள் குறிப்பிட்டார்.

வேலணை கிழக்கு குடும்பநல சேவையாளர் செல்வி புஷ்பா இக் கூட்டத்தில் உரையாற்றுகையில் 'ஒவ்வொரு வீட்டிலும் கண்டிப்பாக மலசலகூடம் ஒன்றிருப்பது அவசியமாகும். மலசல கூடம் இன்மையால் பல தொற்றுநோய்கள் பரவ ஏதுவாகின்றது. இதை யவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்' என்றார்.

வேலணை போஷாக்கு நிலையங்களின் மேற்பார்வையாளர் திரெலோ ஜீவமலர் பேசும்போது - மக்கள் ஒவ்வொருவரும் தத்தமது சுகநலன்களை தாமாகவே கவனிக்க பழகிக் கொள்ள வேண்டும். எமது சுகாதாரத்தை நாம் கவனித்தால்தான் கிராமசுகாதாரம் தானாகவே உருவாகும் நாம் விலையுயர்ந்த உணவுவகைகளில்தான் அதிகபோஷாக்குகள் இருக்குமென்று நினைக்கக் கூடாது. குறைந்த செலவில் கூடிய போஷாக்கு உணவுகளைத் தேர்ந்தெடுக்க பழகிக் கொள்ளவேண்டும். குடும்பத்தினருக்கு இப்படியான குறைந்த செலவில் கூடிய போஷாக்குள்ள உணவுவகைகளை தயாரித்துக் கொடுக்கப் பழகிக்கொள்ளுதல் வேண்டும். இதனால் பணமும் மிச்சமாவதுடன் வீண் தொல்லைகளும் ஏற்பட இடமில்லையென்றும் சொன்னார். வேலணை கிழக்கு மாதர் சங்க தலைவியும், பிரபல சமூகசேவகியுமாகிய திருமதி தி. பத்மாவதி ஆசிரியை கருத்துரை வழங்குகையில், 'இதுபோன்ற போஷாக்குநிலையங்களின்மூலம் வறிய குடும்பங்கள் பெருமளவு நன்மை பெறுவதற்கு வாய்ப்பேற்படுகின்றது. இந்த வாய்ப்பினை இப் போஷாக்கு நிலையம் அமைந்துள்ள செட்டிபுலம் பகுதி மக்கள் தகுந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும். மேலும் இங்கு தயாரித்து தரப்படும் உணவு வகைகளைப் போல நீங்களும் தயாரிக்கப் பழகிக் கொள்ளுதல் வேண்டும்' என்றார்.

கூட்ட இறுதியில் போஷாக்கு நிலைய நலன்புரிச் சங்கத்திற்கான நிர்வாகசபையொன்றும் அமைக்கப்பட்டது.

# 'தமிழன் தரணியெங்கும் தனித்துவம்பெற வித்திட்டது கல்வி என்பது மறப்பதற்கில்லை'

## நீர்வேலி விழாவில் கல்வியதிகாரி மகேசன் பெருமிதம்

(நீர்வேலி)

"தமிழுக்கும் அமுதென்று பெயர்; அத்தகைய இனிய தமிழ் மொழியை தாய் மொழியாகக் கொண்டுள்ள தமிழன் கல்விப் பெருக்கு உடையவன். தமிழன் என்பது அவனது கலைகளைக் கொண்டு அழைக்கும் பண்புப் பெயராகும். இக் கூற்று சிறுவர்களின் கலைகளைத் தெரிவதன் மூலமும் சிறுவர்களை வழி நடத்துவதன் மூலமும் நிரூபணமாகும்."

இவ்வாறு நீர்வேலி கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயத்தில் நடைபெற்ற கலா விருத்திச் சங்கப் பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட சமய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மகேசன் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.

செல்வி உமைவாணி சிவக் கொழுந்தர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்; "இன்று உலகின் பல்வேறு பகுதிகளிலும் தமிழன் தலைநிமிர்ந்து நிற்கக் காரணம் மாணவப் பருவத்திலே அவர்கள் கற்றுக் கொண்ட ஒழுக்கமும், நேர்மையும் மட்டுமன்றி கல்வியிலும் காட்டிய ஈடுபாடுமேயாகும். ஆகவே மாணவப் பருவம் மகத்தானது; சிறுவர்கள் கல்வியைக் கற்கும் போது மனதில் படியும் படி ஆழமாகக் கற்க அவர்களுக்கு உறுதுணையாக ஆசிரியர்களும், பெற்றோர்களும் உடனிருந்து கவனித்தல் வேண்டும்.

மாணவர் மத்தியில் குன்றி வரும் சமய அறிவை வளர்க்கவும், மனதில் பதியும் விதத்தில் ஆசிரியர்கள் போதிக்கவும் வேண்டும். தமிழனுடைய ஊறிப் பிறந்தது கலை, கலாச்சாரம்; இவை அனைத்தையும் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டின் அது மாணவ சமுதாயத்தால் முடியும்.

ஏனெனில் கல்வியோடு, கலையையும் கலாச்சாரத்தையும் தொடர்பு படுத்தி கற்றுவரின் அவைபாதுகாக்கப்படுவதோடு வயதில் சிறியவராயினும் அறிவில் பெரியவராகி விடவும் முடியும்'' என்றும் கூறினார்.

அடுத்து பாடசாலை மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளில், நாடகம், நாட்டியம் போன்றன சபையோரை கவரும் விதத்தில் அமைந்தன. இறுதியாக திருமதி பூபதி கந்தசாமி ஆசிரியை நன்றி கூறினார்.

அன்றைய தினம் சமய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. மகேசன் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்றையும் பாடசாலை மண்டபத்தில் நடாத்தினார்.

சட்டவிரோத மின்பாவனை:

# 'இவர்கள்' செவிசாய்ப்பதற்கு மறுப்பதால் பல விபரீதங்கள்

(கல்வியங்காடு)

கோண்டாவில் உப்புமடம் உப-மின் நிலைய மின்மாற்றி எரிந்துள்ளதால் கடந்த பல நாட்களாக இப்பகுதி இருளில் மூழ்கியுள்ளது. மின்மாற்றி எரிந்தமைக்குச் சட்டவிரோத மின்சாரப் பாவனையேகாரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இப்பகுதியில் உள்ள நிரந்தர மின்சாரப் பாவனையாளர்கள் பலர் பெரும் கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறார்கள்.

இதே போன்று, கோண்டாவில் புகையிரத நிலையத்தடி உப மின் நிலையம், கொக்குவில் மாவடி உப மின் நிலையம், ஆகியவற்றின் பளுவும்அதிகரித்துக் கொண்டே போவதால் இவைகளும் மிக விரைவில் எரிந்து போகக்கூடிய அபாயம் ஏற்படவுள்ளதாகவும் அஞ்சப் படுகிறது.

சட்ட விரோத மின்பாவனையினால் ஏற்படும் தீமைகளையும் கஷ்டங்களையும் பல தடவைகள் எடுத்து விளக்கியும் சட்ட விரோத மின் பாவனையாளர்கள் இவற்றைக் கேட்பதாக இல்லையென்றும், இவர்கள் நிரந்தர மின்சாரப் பாவனையாளர்களை பல இன்னல்களுக்கு ஆளாக்குவதுடன் பொதுமக்களுக்கும் பல அபாயங்களை ஏற்படுத்தி மாவட்ட உப அலுவலகங்களுக்கும் பெரும் நஷ்டத்தை உண்டாக்குகிறார்கள் எனவும் கொக்குவில் உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு. வீ. யோகரட்ணம் வருத்தம் தெரிவித்தார்.

கொக்குவில் பகுதிப் பொது மக்கள் சட்டவிரோத மின் பாவனையை ஒழிப்பதற்கு பெரிதும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# 'தோல்வியே வெற்றியின் முதல்படி என உணர்வோம்'

(சங்கானை)

"தோல்விகளைக் கண்டு மனம் தளராது விடாமுயற்சியுடன் அவை எமது வெற்றிகளின் ஆரம்பம் என நினைத்து இளம் சமுதாயம் ஒவ்வொரு நிலைகளிலும் தொடர்ந்து பயிற்சி பெற்று, பங்கு பற்றி நல்ல வெற்றிகளைப் பெறப் பாடுபட வேண்டும்'' என்று சங்கானை-கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் 9-வது ஆண்டு விழாவிலும், விளையாட்டுப் போட்டியில் பரிசளிப்பு வைபவத்திலும் கலந்து கொண்டு உரையாற்றிய கிராம சேவை அலுவலர் திரு. ஆ. முருகேசு குறிப்பிட்டார்.

வலி-மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம் கொடியேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார்.

திரு.க. அருந்தவராஜா தலைமையில் நடைபெற்ற மேற்படி விழாவில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பொன்மலர் சிவானந்தன் மங்கள விளக்கேற்றினார்.

வலி-மேற்கு விளையாட்டு அதிகாரி திரு. கா அரிச்சந்திரா உரையாற்றுகையில், கிராம அபிவிருத்திச் சங்கம் இப்படியான ஒரு மாபெரும் விளையாட்டு விழாவை ஒழுங்கு செய்தமையை பாராட்டினார்.

உதவி-கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. எஸ். வேதநாயகம் உரையாற்றுகையில். "மறைந்த வட்டுக்கோட்டைத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் அமரர் திரு. தா திருநாவுக்கரசுவின் [illegible]ங்கும், கூடிய கவனமும் இக்கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குக் கிடைத்தமையை இங்கு அமைந்திருக்கும் சங்க இருமாடிக் கட்டடம் உறுதிப்படுத்துகின்றது'' என்றார்.

சங்கானை-கிழக்கு பயிர்ச் செய்கைஉத்தியோகத்தர் திரு. ஜீ. சிதம்பரநாதன், விசேட சேவை அலுவலர் திரு ஆ. பஞ்சாயுதன், சமூகத் தொண்டர் திரு. கா. சுந்தசாமி, பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. ந. மகிழ்ராஜா, முன்னைநாள் தலைவர்கள் திரு சி.க. கணேசன், திரு மு. இராசா மற்றும் பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். பொதுச் செயலாளர் ரு. வ. கனகராசா நன்றியுரை நிகழ்த்தினார்.

# அத்துமீறல் குடியேற்றம்

(வண்ணார்பண்ணை)

நாவாந்துறைப் பகுதிக் கரையோரங்களில் அத்துமீறிக் குடியேற்றங்கள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே வருகின்றன. இனியும் அப் பகுதிக் கரையோரங்களில் குடியேற இடங்கள் கிடையாத அளவுக்கு நெருக்கமாக மக்கள் குடியேற்றங்கள் நடைபெற்றுள்ளன.

இக் குடியேற்றங்களால் பெரும் சங்கடங்களும் ஏற்பட்டுவருகின்றன. மீனவர்கள் அல்லாத பலர் இக் குடியேற்றத்தில் பங்கெடுத்துள்ளனர். ஆரம்பத்தில் சிறு குடிசைகளை அமைத்துக் குடியேறியவர்கள் தற்போது கட்டடங்களை அமைப்பதற்கு முயற்சியுமெடுத்து வருகின்றனர். சிலர் மீன்பிடித் தொழிலாளர்களின் இறங்கு துறைகளில் கட்டடங்களை அமைப்பதற்குத் தயாராகவுமுள்ளனர்.

# ஓய்வு பெற்றார்

(சரசாலை)

மட்டுவில் சந்திரபுர ஸ்கந்த வரோதய மகா வித்தியாலய துணை அதிபர் திரு. க. தம்பையா ஆசிரிய சேவையில் இருந்து இளைப்பாறியுள்ளார் இவர் மேற்படி பாடசாலையில் நீண்டகாலம் சேவையாற்றியவர். இவர் ஒரு சமய, சமூக சேவையாளருமாவார்.

இம்மாத இறுதிக்குள்

# வீடமைப்பு மீதிக் கடன் கிடைக்கும் என்று அறிவிப்பு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபைப் பகுதிக்கெனதேசிய வீடமைப்பு கடன் வழங்கல் சபையால் ஒதுக்கப்பட்ட 5 இலட்சம் ரூபாவை தேசிய வீடமைப்பு விசேட சேவையாளர் திரு. சி. சிவபாலசிங்கம், தேசிய வீடமைப்பு உத்தியோகத்தர் திரு. கே. ராஜசூரியர் இப் பகுதி கிராம சேவையாளர் திரு. வி. ஜெயவீரசிங்கம் ஆகியோர் வழங்குவதில் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

கடந்த ஒரு மாதகாலத்துள் இரண்டரை இலட்சம் ரூபா கடனாக வழங்கப்படவுள்ளதாகவும் மீதித் தொகை இம்மாத இறுதிக்குள் வழங்கப்பட்டு விடுமென்றும் தெரிவித்த விசேட சேவையாளர் இந்த ஆண்டுக்கு என 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும 104 விண்ணப்பதாரருக்கு இத் தொகை வழங்கப்படும் என்றும் சொன்னார்.

10 நாள் பரிதவிப்பு நீங்கியது

# சங்குப்பிட்டி - மன்னார் பஸ் சேவை மீண்டும் ஆரம்பம்

(பூநகரி)

கடுமையான மழை காரணமாக வீதியை மூடி பல இடங்களில் வெள்ளம் பாய்ந்த காரணத்தால் இடை நிறுத்தப்பட்டிருந்த சங்குபிட்டி - மன்னார் பஸ் சேவை பத்து நாட்களின் பின் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது.

குறிப்பிட்ட பத்து நாட்களிலும் தனியார் வாகனங்கள் கூட சேவையில் ஈடு படாததால் மன்னார்ப் பகுதியில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களில் அநேகமானோர் சங்குப்பிட்டி வரை தினம் தினம் வந்து திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

இப்போ பூநகரி - மன்னார் வீதி பல இடங்களில் வெள்ளத்தினால் அரிக்கப்பட்டும் குண்டும் குழியுமாய் இருப்பதால் இரண்டு மடங்கு நேரம் பிரயாணத்துக்குச் செல்வதாகவும் தெரிகிறது. வீதிச்சீர் கேட்டை வைத்து தனியார் வாகனங்களின் கட்டணத்தையும் உயர்த்தியுள்ளனர். இதனால் பிரயாணிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகின்றனர்.

# பாலர் பாடசாலை ஆசிரியரும் தகைமை பெற வேண்டும்

(சாவகச்சேரி)

"சரியான இயல்புகளையும், நேரிய நடத்தைகளையும் கொண்ட, எதிர்கால சமுதாயத்தை உருவாக்கித் தருவதே பாலர் பாடசாலைகளின் நோக்கமாகும். இப்படியான பாலர் பாடசாலைகளில் அப்பிஞ்சுப் பாலன்களுக்கான காற்றோட்ட, ஒளிவசதியற்ற பாலர் பாடசாலைகள் அமைவது அவர்களின் உடல்வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும்.''

இவ்வாறு சாவகச்சேரி ஆரம்ப சுகாதார இணைப்புக் குழு உறுப்பினர்கள் மத்தியில் உரை நிகழ்த்திய சாவகச்சேரி நகர சுகாதாரப் பரிசோதகர் திரு. எஸ். செல்வபாஸ்கரதுரை நாயகம் கவலை தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறியதாவது: இன்று நகரங்கள் கிராமங்கள் மத்தியில் ஆங்காங்கே பாலர் பாடசாலை இயங்குகின்றன. அங்கே பல பாடசாலைகளுக்குச் செல்லக் கூடிய வயது வராத பாலர்கள் பயில்கிறார்கள். ஆனால் இப்பாலர் பாடசாலைகளில் பல போதிய காற்றோட்ட வசதியோ, ஒளிவசதியோ அற்ற நிலையிலுள்ளன. அப்படியான நிலையில் குழந்தைகளின் உடல் வளர்ச்சியைப் பெரிதும் பாதிக்கும்

இதே வேளையில் குழந்தைகள் பயிலும் பாலர் பாடசாலை ஆசிரியர்கள் விசேட தகைமைகளையும், விசேட பயிற்சிகளையும் பெற்றிருக்க வேண்டும். அப்படியான தகுதிகளோ, பயிற்சிகளோ அற்ற ஆசிரியர்கள் பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களாக இருந்து கற்பித்தல் தொழிலைச் செய்யும் போது, அப் பாலர்களின் கற்றல் ஒழுங்காக அமையாது போவதோடு, அவர்களின் உளவளர்ச்சியையும்கூடப் பெருமளவில் பாதிக்கும். எனவே தகுந்த வசதிகள், தகுதியுடைய பயிற்றுநர்கள் இல்லாத பாடசாலைகளினால் பாலர்களின் உடல் வளர்ச்சியையும், உளவளர்ச்சியையும், கூடப் பாதித்துவிடும்!

## பல்கலைக்கழக மாணவர் ஆதரவு

அன்னையர் முன்னணியினர் ஆரம்பித்துள்ள மறியல் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ். பல்கலைக் கழக மாணவர்களும் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தார்கள். பெருமளவு மாணவர்கள் நேற்றைய மறியலிலும் கலந்து கொண்டனர்.

ஈழமுரசு



உதய சிந்தனை

அன்பாலும் அமைதியாலும் ஒரு மனிதனை ஈர்க்க முடியும் ஆணவத்தால் அல்ல.

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி : 23336

## இதய ஒலி

24-1-86 வெள்ளிக்கிழமை (குரோதன) தை-11

# அரச இயந்திரம் முடமாகி வருகிறது

யாழ்ப்பாணத்தின் சிவில் நிர்வாகத்துக்கு, புதிய பாதுகாப்பு வலயச் சட்டத்தால் ஏற்பட்டிருக்கும் அபாயம்பற்றி நேற்று இங்கு குறிப்பிட்டிருந்தோம்.

யாழ்ப்பாணத்தின் போக்குவரத்து, வர்த்தக சேவைகள் இதனால் அடைந்துவரும் நெருக்கடிகள் இப்போது கண்கூடாகத் தெரிகின்றன.

இங்குள்ள முஸ்லிம்மக்கள் தங்கள்பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்த மகஜரொன்றில் யாழ்நகரில் மட்டும் சுமார் இருபதாயிரம் முஸ்லிம் மக்கள் இச்சட்டத்தினால் பெரும் பாதிப்படைந்துள்ளதுடன், உயிரபாயத்தையும் எதிர்நோக்குவதாகச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

தங்களின் வர்த்தக நிலையங்களும் இப் பாதுகாப்புப் பிரதேசத்திலேயே அடங்கியிருப்பதால், தமது ஜீவனோபாயத்துக்கும் ஏற்படக்கூடிய கஷ்டத்தை இவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் கடையடைப்பும், ஊர்வலமும் நடத்திய யாழ்நகர வர்த்தகர்களும் தங்கள் நெருக்கடி நிலையைச் சுட்டிக்காட்டியுள்ளனர்.

சுமார் ஐயாயிரம் வர்த்தக நிலையங்களும், ஏறத்தாழ இருபத்தையாயிரம் சிப்பந்திகளும் பாதுகாப்பு வலயச் சட்டத்தினால் அடையவுள்ள பிரச்சினைகளை அரசாங்க அதிபர் ஊடாக அனுப்பிவைத்துள்ள மகஜரில் எடுத்துக் கூறியுள்ளனர்.

அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்த மறியல் போராட்டத்தினால் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தின் வேலைகள் கடந்த இரு தினங்களாக முற்றாக ஸ்தம்பிதமடைந்தன.

கோட்டை முகாம் மூடப்படும் வரை இந்நிலை தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ள அதே வேளையில் பல்வேறு அமைப்புக்களும் இதற்குத் தமது பூரணமான ஆதரவையும் பகிரங்கமாகத் தெரிவித்துள்ளமையால் சாத்வீகப் போராட்டம் பலமடையவுள்ளது.

அது மட்டுமன்றி, மற்றைய அரசாங்க அலுவலகங்களுக்கும் இப்போராட்டம் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களம், யாழ்நகர், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் அலுவலக வேலைகளும் விஸ்தரிக்கப்பட்ட மறியல் போராட்டத்தால் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்கு ஏற்பட்டுள்ள அபாய நிலைபற்றி இரண்டு ஆசிரிய சங்கங்கள் தங்கள் அறிக்கையில் சுட்டிக் காட்டியுள்ளன.

இங்குள்ள சுமார் முப்பது பாடசாலைகள் இதனால் நேரடியாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஏறத்தாழ அரைலட்சம் மாணவர்கள் கல்வி கற்கமுடியாத நிலை உருவாகியுள்ளதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பிரதான ஆஸ்பத்திரியின் டாக்டர்கள், தாதிகள், ஊழியர்கள் உட்பட அனைவருமே தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் அமைதியான ஊர்வலமொன்றை ஆஸ்பத்திரி வளவுக்குள் நடத்தியுள்ளனர்.

நோயாளர்கள் பாதிக்கப்படாத வகையில், தினசரி இவ் ஊர்வலத்தை நடத்துவதெனவும் இவர்கள் தீர்மானித்துள்ளனர்

ஆஸ்பத்திரி விடுதியில் தங்கியிருக்கும் டாக்டர்கள் அங்கு தங்கியிருக்க அச்சம் தெரிவித்துள்ளதால், சிவில் நிர்வாகம், கல்விச் சேவைகளுக்கு ஏற்பட்டுள்ளது போன்ற நெருக்கடி, வைத்திய சேவையிலும் உருவாகலாம் போலத் தெரிகின்றது.

இன்றும் நாளையும் யாழ்நகரில் நடைபெறவுள்ள யாழ். பிரஜைகள் குழு, இணைப்புக்குழு ஆகியவற்றின் கூட்டத்தில் இவை சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

ஒரு முகாமை வைத்திருக்க முனைவதால், இங்கு அரச இயந்திரம் முடங்குவதன் உண்மை நிலையை எடுத்துக் கூற, பிரஜைகள் குழுக்கள் முன்வரவேண்டும்.

தவறினால், மக்கள் எழுச்சியைக் கட்டுப்படுத்த எவராலும் முடியாது போய்விடும்.

## வியாழ மாற்ற பலாபலன்கள்

# யுத்தமேகம் கருக்கூட்டும்; அரசியலில் கொந்தளிப்பு இனமோதல் ஏற்படலாம்

**இ. மகாதேவா**

பொன்னுக்கு நாயகன், பெண்ணுக்கு மங்கள காரியத்தைச் செய்பவன், புத்திரகாரகன் புத்தியுள்ளவர்களைக் கூர்மைப்படுத்துபவன். பொருளுக்குச் செட்டி, அறிவிற்குத் தந்தை, அமைதிக்கு சாந்தரூபி, வியாதிக்கு வைத்தியன், குருவிற்கு அதிபதி என்றெல்லாம் போற்றப்படும் வியாழபகவானான குரு 25 1. 1986ல் மகரஇராசியிலிருந்து கும்பராசிக்கு இடம் பெயரும் பொழுது இப்பூவுலக மக்களுக்கு நடக்கவிருக்கும் பலனை அறிவோம். வியாழ பகவான் மேடம், மிதுனம், சிங்கம், மகரம், முதலிய இராசிகளுக்கு நற்பலனைச் செய்வார். அதாவது அச்சுவினி, பரணி, திருவாதிரை, புனர்பூசம், மகம், பூரம், உத்தராடம் திருவோணம் முதலிய நட்ஷத்திரங்களுக்கு முதல் தரமான நற்பலன்களையும், மிருகசீரிடம், அவிட்டம், முதலிய நட்ஷத்திரங்களுக்கு அடுத்த பட்ச நற்பலன்களையும் கார்த்திகை 1ம் பாதம், உத்தரம் 1ம் பாதங்களுக்கு அரை குறையான நற்பலன்களையும் செய்யும். மேலும் இடபம், கன்னி, தனுசு முதலிய இராசிகளுக்கு மத்திம பலனையும் துலாம், கர்க்கடகம், விருச்சிகம் முதலிய இராசிகளுக்கு நன்மை தீமை கலந்த பலனையும், கும்பம், மீனம் இராசிகளுக்கு கெட்டபலனையும் தருவார் அவ்வாறு கஷ்டபலனை அனுபவிக்கவிருக்கும் மக்கள் அவரவர் நட்ஷத்திரங்களுக்கு தட்சணாமூர்த்திக்கு 1008 பொன்னொச்சிப் பூவால் அர்ச்சனை செய்யவும் மேலும் வியாழக்கிழமை விரதம் இருக்கவும். மஞ்சள்பூ, மஞ்சள் சோறு, மஞ்சள்பட்டு மஞ்சள் நிற இனிப்புவகை படைத்து வியாழபகவானை வழிபடவும், ஏழைகளுக்கு தானம் வழங்கவும், இவ்வாறு செய்வதால் ஓரளவு துன்பச் சுமை குறைந்து மனச்சாந்தி ஏற்படும்.

வியாழ மாற்றத்தாலும், விருச்சிக இராசியில் செவ்வாய் 22. 1. 1986ல் வருவதாலும் எமது நாட்டில் யுத்த மேகம் கருக்கூடுவதோடு இனமோதல்கள் வரக்கூடிய சூழ்நிலை உருவாகும். அரசியல் வானில் கொந்தளிப்பான சூழ்நிலை உருவாகி அதனால் நாட்டில் செயற்கை அழிவுகள் ஏற்படும். மேலும் அடுத்தடுத்து இயற்கை அழிவுகளும் தொடரும். திடீரென செயற்கையான ஆயுதம், நெருப்பு, வெடிகுண்டு விபத்து உயிர் அழிவுகள் ஏற்படும். எனவே அரசியல்வாதிகளும், அதிகாரத்திலுள்ளவர்களும் இதையுணர்ந்து சமாதானம் ஏற்படச் செய்து மக்களைப் பாதுகாக்க வேண்டும்.

வியாழ மாற்றங்களில் தனித் தனியாக ராசிகளுக்கு ஏற்படும் பலன்களை இனிப்பார்ப்போம்:

### மேடம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ம் பாதம்)

உங்களுக்கு பொன்னவனான வியாழன் 11ம் இடத்தில் வருவதால் இலாபகரமாக இருக்கும். பொருள் வரவு அதிகரிக்க இடமுண்டு. வீடு மனைச்சிறப்பும் சகோதர உதவிகள் இருந்த போதும் அட்டமத்தில் சனி வந்ததால் இடைக்கிடை கஷ்டங்கள் ஏற்படச் செய்யும். பிரயாணங்களில் அவதானமாக இருத்தல் வேண்டும். ஆயுதம் பாவிப்போர்களால் பயம் அல்லது தொல்லை ஏற்படும். எவரையும் நம்பி நடக்க வேண்டாம். காத்திருந்து கழுத்தறுக்கும் கயவர்கள் பக்கத்தில் இருந்து கொண்டிருப்பார்கள். அளந்து பேசிப் பழகவும். புதிய முதலீடு, புதியஉருவாக்கங்கள், புதிய வியாபாரம் என்பனவற்றை வருஷத் தொடக்கத்திலிருந்து செய்யவும். இதுவரை தொழிலிடத்தில் ஏற்பட்ட கஷ்டங்கள் மெல்ல மெல்ல நீங்கத் தொடங்கும். மேற்குத் திசையைநாடிப் பிரயாணங்கள் செய்தால் வெளிநாட்டுச் சிறப்பு ஏற்படும். மேடம் இலக்கணத்தில் பிறந்தவர்களும் சூரியன் அல்லது வியாழ திசை நடப்பவர்களுக்கும் இந்த வருஷத்தில் நல்ல பலன்கள் நிட்சயம் நடக்கும். ''காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளுங்கள்'' வருங்காலத்தில் நல்ல அறுவடையைச்செய்வீர்கள். சகோதரங்களின் முன்னேற்றம், மங்களகரமான காரியங்கள் நிறைவேறும். மாணவர்களுக்கு சாதகமான காலமாகும். சிலருக்கு இரத்த அழுத்தம், ஈரல் வியாதி, கை, கால், காது போன்ற இடங்களில் நோ அல்லது சரும ரோகங்கள் ஏற்பட்டு வைத்தியம் செய்ய வேண்டி ஏற்படும்.

### இடபம்

(கார்த்திகை 2 3 4 ரோகிணி, மிருகசீரிடம் 1, 2ம் பாதங்கள்)

உங்களுக்கு 10 ம் இடத்தில் வியாழனும், 7ம் இடத்தில் சனீஸ்வரனும்வந்துள்ளார்கள் வீடு, தொழில் இடங்களில் மாற்றங்கள் அல்லது அயலவர்களின் மாற்றங்கள் ஏற்படும். சூழல் மாறும். வெளிநாடு என ஆசை வார்த்தை காட்டி சிலர் முற்படுவார்கள். ஏமாந்துவிடாதீர்கள். திருமணம், திருமணம் எனப் பேசி சிலர் பணம் கறக்கப்பார்ப்பார்கள் அவதானம் தேவையாகும். சொந்தமுயற்சி செய்து அல்லது வெளிநாட்டு நண்பர்கள் மூலம்தென்மேற்கு, வடகிழக்குத் திசைகளை நாடி வெளிநாட்டுப் பிரயாணங்களைச் செய்யவும். தொழில் வாய்ப்பு, புதிய முன்னேற்றம் ஏற்படும். மண்ணை நம்பினால் பொருளை, இலாபத்தைப்பெறுவீர்கள். வியாபாரிகளுக்குபுதிய இலாபம், சிறப்பு, பொருள் வரவு ஏற்படும் புதியதிட்டம், புதியநண்பர்கள், பங்காளர்களால் நற்பலன்கள்அதிகரிக்கும். ''தூற்றுபவர் தூற்றட்டும் போற்றுபவர் போற்றட்டும்'' உங்களை நிறைவுபடுத்தி உறுதி கொள்ளுங்கள். புதிய வாழ்வு ஏற்படும் முதுகு, முழங்கால், எலும்பு. முகம் போன்ற இடங்களில் பாதிப்புகள் ஏற்படஇடமுண்டு. இரவில் பிரயாணங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். சனி, புதன் திசை நடப்பவர்களுக்குநற்பலன்கள்அதிகரிக்கும்

### மிதுனம்

(மிருகசீரிடம் 3,4 திருவாதிரை, புனர்பூசம் 1 2 3 ம் பாதங்கள்)

உங்களுக்கு 9ம் இடத்தில் வியாழனும், 6ம் இடத்தில் சனீஸ்வரனும்வந்துள்ளார்கள். வெளிநாடு சென்று பொருள் தேட வாய்ப்புகளுண்டு. புதிய திட்டங்கள், முயற்சிகள், புதிய கோணங்களில் தொடங்குங்கள். பிள்ளைகளின் கல்விக்காக செலவு செய்வீர்கள். தந்தையாலும், தந்தை வழியினராலும் பெரியவர்களாலும் உதவிகள் உண்டு. புனித ஸ்தலயாத்திரைகள் அடிக்கடி ஏற்படும் சகோதரர்களுக்கு உங்களால் மத்திம பலன் ஏற்படும். அவர்களால் பொருள் வரவு ஏற்படும். தெற்கு மேற்குத் திசையில் பிறந்த நாட்டில் பிரயாணங்களைத் தவிர்க்கவும். அந்நிய நாடுகளாயின் கிழக்கு, மேற்குத்திசைகளில் சென்றால் வெற்றி கிடைக்கும். அரசியல்வாதிகள் மிக அவதானமாக இருக்கவும். சிலருக்கு எதிர்பாராத விபத்துக்கள் ஏற்பட இடமுண்டு. நெஞ்சு, இடுப்பு, தொடை முதலிய இடங்களில் தாக்கம் ஏற்படும். மேலும் திருமணப் பலன் உங்களைத் தேடிவரும். மாணவர்களுக்கு மத்திம பலன் மிதுனம்- இலக்கினத்தாருக்கும், சனி, வெள்ளிதிசை நடப்பவர்களுக்கும் விசேட பலன் காத்திருக்கும். சகோதரரால் நன்மை, தீமை மாறி மாறி நடக்கும், பொதுவாக நன்மைகள் அதிகம் உங்களுக்கு நடக்கும்.

### கர்க்கடகம்

(புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)

உங்களுக்கு 8ல் வியாழனும், 5ல் சனியும் வருவதால் பொருட் செலவு அதிகரிக்கும். வைத்தியச் செலவுக்கு குறைவிருக்காது எடுத்ததற்கெல்லாம் பணம் பணம் எனக் கடன்பட்டுக் கொண்டிருக்கச் செய்யும். குடும்பத்தினருடன் வாக்குக் கலக்கமும், இனஜன விரோதமும் சர்வசாதாரணமாக இருக்கும். பொறுமையால் சிலர் வேண்டாத தொல்லைகளைத் தருவார்கள். ''தேடி வந்த சீதேவியை'' காலால் உதைப்பீர்கள் பல சந்தர்ப்பங்கள் தவறிப் போகலாம். எனவே வரும் சந்தர்ப்பங்களை உங்களுக்குச் சாதகமான முறையில் திருப்பிக் கொள்ளுங்கள். உழைப்பு, உழைப்பு என ஓடித்திரிந்தாலும் போதிய பலன் கிட்டாமல் மனச்சோர்வு ஏற்பட இடமுண்டு வழக்குகள் இருந்தால் ஒரு வருஷம் தள்ளிப்போட்டு வாருங்கள். 1986 ஆகஸ்டு மாதத்திற்குப் பின்பு ஓரளவு ஆறுதலும், சந்தர்ப்பங்களும் ஏற்பட இடமுண்டு. ஆயினும் தெய்வ அனுக்கிரகமும் பெரியவர்களின் ஆதரவும் ஓரளவு கெட்ட பலன்களைத் தடுக்கும். சந்திரன், செவ்வாய், வியாழ திசை உள்ளவர்களுக்கு அரசாங்கத்தில் வேலை செய்பவர்களால் பலவித உதவிகள் கிடைக்கும். மத்திம பலன் நடக்கும்.

—5 ஆம் பக்கம் பார்க்க

# உகண்டாவில் உக்கிர சமர்

# 200 அரசு படை வீரர் மடிவு

(கம்பாலா)

உகண்டா தலைநகர் கம்பாலாவிற்கு அருகே தொடர்ந்து கடும் சண்டை நிகழ்ந்து வருவதாக நேற்று அறிவிககப்பட்டது. அரசுபடைகளும், கிளர்ச்சிப் படைகளும் பயங்கரமாக மோதிக் கொண்டதாகவும் இருநூறு படை வீரர்கள் கொல்லப்பட்டதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கிளர்ச்சிப் படைகள் அரசுப் படைகளுக்குப் பலத்த அடி கொடுத்துள்ளதாக ஒருசெய்தி தெரிவிக்கிறது.

இதனையடுத்து உகண்டா தலைவர் ஒகெல்லோ இராணுவ சபையின் அவசரக் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் ஏற்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வு உடன்பாட்டைப் பின்பற்றுமாறும், சண்டையை நிறுத்துமாறும் அவர் கிளர்ச்சிப்படையினரைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

எதிரணித் தாக்குதலால் அரசுப் படைகள் பலத்த பாதிப்படைந்துள்ளன என்று பிந்திக் கிடைத்த தகவல் ஒன்று ஊர்ஜிதம் செய்தது.

பிரதமர் ராஜீவ் வற்புறுத்து

## நாட்டு நலனுக்கு வனங்கள் பாதுகாப்பு அவசியமானது

(புதுடில்லி)

"வனங்களைப் பேணிக் காக்க பொதுமக்களின் ஒத்துழைப்புத் தேவை என்று பிரதம மந்திரி திரு ராஜிவ்காந்தி புதுடில்லியில் நடைபெற்ற வனவாரியத்தின் இரு நாள் மாநாட்டில் பேசுகையில் கூறினார்.

"வனங்கள் பாதுகாக்கப்படுவது நாட்டு நலனுக்கு மிகத் தேவையானது" என்றும் அவர் வற்புறுத்தினர்.

இம்மாநாட்டில் மாநில அமைச்சர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

## பெனஸிர் அறிவிப்பு

(லண்டன்)

எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானுக்குத் திரும்பி மீண்டும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடப்போவதாக செல்வி பெனஸிர் பூட்டோ அறிவித்துள்ளார். இராணுவச்சட்ட நீக்கம் ஒரு தந்திரம் என்றும் அவர் கூறியுள்ளார்.

தூக்கிலிடப்பட்ட மாஜிஜனாதிபதி சுல்பிகார் அலிபூட்டோவின் மகளான இவர் பாகிஸ்தானிய மக்கள் கட்சியின் தலைவராவார். இக்கட்சி தடை செய்யப்பட்டுள்ளது.

## கௌரவம்

(புதுடில்லி)

வீர தீரச்செயல்களை செய்து பாராட்டப்பட்ட 12 சிறுவர், சிறுமியருக்கு பாரதப் பிரதமர் திரு ராஜீவ்காந்தி தேசிய விருதுகளை வழங்கி கௌரவித்தார்.

தமிழகத்தில்

## போதை வஸ்துக் கடத்தல்: இலங்கையருடன் 11 பேர் கைது

(சென்னை)

சென்னையிலும், நாகபட்டினத்திலும் அபின், கஞ்சா ஆகிய போதை வஸ்துகளை வைத்திருந்ததாக மூன்று இலங்கையர் உட்பட பதினொரு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரஸ்தாப இலங்கையர் பாஸ்போட் இல்லாதவர்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இக்கடத்தல் பொருட்களின் பெறுமதி நான்கரை இலட்சம் ரூபா என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

## போதை தடுப்பு மாநாடு பாகிஸ்தானில் ஆரம்பம்

(இஸ்லாமாபாத்)

வளைகுடா நாடுகளின் போதைத் தடுப்பு மாநாடு பாகிஸ்தானில் ஆரம்பமாகியுள்ளது. சர்வதேச இன்ரபோல் பொலிஸ் உயர் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

பாகிஸ்தான் ஜனாதிபதி ஜெனரல் ஷியாவுல் ஹக் இதில் பேசுகையில், போதை வஸ்து மனிதனை அழிக்கும் மருந்து. இதனை முற்றாக ஒழிக்க சகலரும் முன்வர வேண்டும். இதைத் தடுக்க பாகிஸ்தான் தன்னாலான உதவிகளைச் செய்யும் என்று கூறினார்.

போதைக்கு அடிமையானவர்களை எண்ணி தான் கவலையடைவதாகவும் அவர் சொன்னார்.

## லெபனான் குண்டு வெடிப்பு பலியானோர் தொகை: 27

(பெய்ரூட்)

லெபனானில் நடந்த கார் குண்டு வெடிப்பில் மேலும் இருவர் பலியாகியதையடுத்து மொத்தம் 27 பேர் மரணமானதாக அறிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் 250 கிலோ கிராம் நிறையுள்ள குண்டு பாவிக்கப்பட்டதாக பொலிஸ் தெரிவிக்கின்றது.

குண்டு வெடித்த இடத்தில் 12 அடி ஆழமான கிடங்கு இருந்ததும் கண்டு பிடிக்கப்பட்டது. மீட்பு வேலைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. எங்கும் புகைமண்டலம் காணப்படுகிறது. அவ்விடத்தைச் சுற்றி இராணுவம் பாதுகாப்பு நடவடிககை மேற்கொண்டுள்ளது.

லிபியா மீதான தடைகள்

## மேற்கு ஜெர்மனி, சுவிஸும் கூட நிராகரித்து விட்டன

(லண்டன்)

லிபியா மீது தடைகளை விதிக்க வேண்டுமென்ற அமெரிக்காவின் கோரிக்கையை மேற்கு ஜெர்மனியும், சுவிட்சர்லாந்தும் நிராகரித்துள்ளன. முன்னர் விதிக்கப்பட்ட இத்தகைய தடைகள் பயனற்றுப் போயின என்று மேற்கு ஜெர்மனி கூறியுள்ளது.

பொன்னில் இது குறித்து வெளியிடப்பட்ட அறிவிப்பில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கையில் நேட்டோ நாடுகளின் கூட்டு முன்முயற்சியில் தான் சேர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

லிபியாவிலுள்ள ஆயிரத்து ஐந்நூறு மேற்கு ஜெர்மனியர் பற்றியும், அங்கு வைப்பில் உள்ள கோடிக்கணக்கான டாலர் வர்த்தகம் பற்றியுமே தமக்கு அக்கறைஎன்று மேற்கு ஜெர்மனி கூறியுள்ளது.

லிபியாவின் எண்ணெய்யை ஆகக் கூடுதலாக இறக்குமதி செய்யும் மூன்றுவது நாடு மேற்கு ஜெர்மனி என்பது குறிப்பிடத்தக்கது.

சுவிட்சர்லாந்தின் பெடரல் சபை இது தொடர்பான தனது தீர்மானத்தை அமெரிக்க ஜனாதிபதி திரு. றெனல்ட் றீகனுக்கு கடித வடிவில் அனுப்பி வைத்துள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### 34 பேர் மடிவு

(புதுடில்லி)

தெற்கு டில்லியில் நேற்று அதிகாலை ஹோட்டல் ஒன்றில் நிகழ்ந்த கோரத் தீ விபத்தால் 34 பேர் மடிந்தனர், 31 பேர் கடும் காயமுற்றனர். இறந்தோரிலும், காயமடைந்தோரிலும் பலர் வெளிநாட்டவராவர். நீதி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக ஆசிரிய சங்கம் எச்சரிக்கை:

## சீர்குலைந்துள்ள இன உறவுகளை மேலும் விரிவடையச் செய்ய புதுச்சட்டம் உதவும்

"வடக்கிலுள்ள பாதுகாப்பு முகாம்களைச் சுற்றி அமுல் செய்யப்படவுள்ள 1000 மீற்றர் சுற்றளவுள்ள பாதுகாப்பு வலயம் என்ற தீர்மானத்தை யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது."

கோட்டையை அடுத்துள்ள பாதுகாப்பு வலயத்துள் அடங்கும் பிரதேசம், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மையத்தானமாக இருக்கின்றது. இவ்வலயத்தினுள் யாழ்ப்பாணப் பட்டினத்து மக்கள் மாத்திரமன்றி பிரதேசத்தின் எல்லாப் பகுதியினருக்கும் முக்கிய தேவைகளை வழங்குகின்ற வைத்தியசாலை, மத்திய தபால் நிலையம், வங்கிகள், வர்த்தக நிலையங்கள், சந்தை வசதிகள் உள்ளடக்கியுள்ளன. ஆயுதப் படையினர் யாழ்ப்பாண நகரத்தினுள் பிரவேசித்ததினால் பல பொதுமக்கள் உயிரிழக்க நேரிட்டதை அண்மைக்கால அனுபவங்கள் எமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. பாதுகாப்புப் படையினர் காரணமின்றி தம் ஆயுதங்களை உபயோகித்து அப்பாவிப் பொதுமக்களிடையே கணக்கிட முடியாத உயிரிழப்புக்களையும், சேதங்களையும் ஏற்படுத்தி வருவது வழமையான நிகழ்ச்சியாகிவிட்டது. ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் அவசரகாலச் சட்டத்தின்படி ஆயுதப்படையினர் தடையற்ற அதிகாரங்களைப் பெற்றுள்ளார்கள். பாதுகாப்பு வலயத்தை உண்டாக்கியதனால் எந்தவொரு பிரஜையையும் சந்தேகத்தின் பேரில் அழிக்க ஆயுதப்படையினருக்குப் பூரண அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு மாவட்டத்திலும், ஏனைய குடிசனச் செறிவுள்ள பகுதிகளிலும் நிலைகொண்டுள்ள ஆயுதப் படையினரை அவ்விடங்களில் இருந்து முற்றாக வாபஸ் பெறுவதன் மூலமாகவே ஆயுதப் படைக்கும், பொது மக்களுக்குமிடையிலுள்ள முரண்பட்ட நிலையைத் தவிர்க்க முடியும்.

மேலும், ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் ஒல்லாந்தர்களினால் கட்டப்பட்டதும், உலகிலேயே நன்கு பேணப்பட்டுவரும் இந்த வகையைச் சார்ந்த தலைசிறந்த கட்டடக்கலை ஆக்கங்களுள் ஒன்றாக விளங்குவதுமான யாழ்ப்பாணக் கோட்டையின் நிலைபற்றி கல்வியாளர்களாகிய நாம் மிகவும் விசனம் கொண்டுள்ளோம்.

மக்கட் செறிவுள்ள பகுதிகளில் இருந்து ஆயுதப்படையினரை அகற்றுவதற்கும், பாதுகாப்பு வலயச் சட்டத்தினை உடனடியாக நீக்குவதற்கும் கோருகின்ற பல்வேறு நிறுவனங்களுடன் நாமும் முழுமனதுடன் இணைந்து கொள்கின்றோம்.

இத்தகைய நடவடிக்கைகள் ஏற்கனவே சீர்குலைந்துள்ள இன உறவுகளை மேலும் மோசமடையச் செய்வதற்கே உதவுமென எச்சரிக்க விரும்புகின்றோம் எனவும் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது

இலங்கைக் கடற்படையால்

## ராமேஸ்வரத்தில் தமிழக மீனவர்கள் கைதாகினர்

(ராமேஸ்வரம்)

ராமேஸ்வரம் கடலில் மீன் பிடிக்கச் சென்ற 4 பாரத மீன் பிடிப் படகுகளை மீனவருடன் இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியதாகவும் பாரத அதிகாரிகள் மேற் கொண்ட துரித நடவடிக்கையையடுத்து மூன்று படகுகள் விடுவிக்கப்பட்டதாகவும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஒரு படகை மீனவர்களுடன் இலங்கைக் கடற்படையினர் பாதுகாப்பில் வைத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சுபாஸ் சந்திரபோஸின்

## வாழ்க்கையும், போதனையும் இளைஞர்க்கு முன் மாதிரி

(புதுடில்லி)

"சுபாஸ் சந்திர போஸின் வாழ்வும், போதனைகளும் சகலருக்கும் குறிப்பாக இளைஞர்களுக்கு முன்மாதிரியானது" என்று அவரின் 89 வது நினைவு தினத்தையொட்டி ஜனாதிபதி திரு. ஜியானி ஜெயில்சிங் விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளார்.

"நாட்டின் விடுதலைக்குப் போராடிய தலைசிறந்த தலைவர்களில் ஒருவர் அவர். பாரதத்திற்கு மட்டுமல்ல ஆசியாவுக்கே அவர் அழியா நினைவுச் சின்னத்தை விட்டுச் சென்றுள்ளார்" என்றும் அவர் கூறியுள்ளார்.

அவர் பிறந்த இடமான கட்டாக்கில் உதய ஊர்வலங்கள் நடைபெற்றன.

### யுத்தமேகம்....

**சிங்கம்**

(மகம், பூரம், உத்தரம் 1ம் பாதம்)

உங்களுக்கு வியாழபகவான் 7ம் இடத்திலும் சனீஸ்வரன் 4ம் இடத்திலும் வருவதால் நன்மைதீமை மாறிமாறி ஏற்படும். திருமணப் பேச்சுக்கள், அல்லது குடும்பத்தினருக்கு நல்ல எதிர்காலத்தைஅமைக்க சந்தர்ப்பங்கள் ஏற்படும். "கலகம் பிறந்து நியாயம் பிறக்கும்" தொழிலிடத்தில் மாற்றங்கள் புதிய இடச்சூழ்நிலை ஏற்படும். இதுவரை கைகூடாத காரியங்கள் நிறைவேறும். அயலவர்கள் உறவினர்களுடன் அவதானமாக இருக்கவும், விவசாயிகள், வியாபாரிகளுக்கு நற்பலன்கள் அதிகரிக்கும். நீங்கள் வீணாக மற்றவர்களின் விஷயங்களில் தலையிடாதீர்கள். அதனால் குறைகுற்றங்கள் கேட்க நேரிடும். உடல்நிலையில் வயிறு, மூலம், தோல், முதுகு இந்த இடங்கள் தாக்கத்துக்கு உள்ளாகும். கைகால் உளைவு, இரத்தஅழுத்தம் ஏற்படும். வைத்தியம் செய்யவும், வெளி நாட்டில் கிழக்குத்திசையை நாடிப் பிரயாணங்களைச் செய்யவும். தொழில் வாய்ப்பு, நன்மைகரமான பலன்கள் கிடைக்கும். மாணவர்களுக்கு சோதனையான காலமாகும். உங்களுக்கு முன்னுக்கு தீமைபோல் தோன்றும் காரியங்கள் பின்னர் நன்மைகரமாக அமையும். வியாழன், செவ்வாய் சூரிய திசை நடப்புத் திசையாக இருப்பவர்களுக்கு நல்ல எதிர் காலம் ஏற்படும்.

(மிகுதி நாளை தொடரும்)

ஈழமுரசு

## ராணுவமுகாமை நீக்குமாறு மத்தியகல்லூரி கோரிக்கை

ஆயிரம் மீற்றர் பாதுகாப்பு வலயத்தை நீக்குமாறும், இராணுவ முகாமை கோட்டையிலிருந்து நீக்குமாறும் யாழ். மத்திய கல்லூரிப் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது. இது தொடர்பாக அபிவிருத்திச் சங்கம் நிறைவேற்றியுள்ள தீர்மானம் ஜனாதிபதி, தேசிய பந்தோபஸ்து அமைச்சர், வடபிரதேச இராணுவ அதிகாரி, யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மக்கள் மத்தியில் பெரும் பதற்றம்

# நெடுங்கேணியில் இராணுவம் குவிப்பு; வாகனங்கள் வருகை

(நெடுங்கேணி)

நெடுங்கேணிக்கு செவ்வாய்க்கிழமை மாலை பெரும் தொகையான இராணுவத்தினர் வந்ததால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வீதிகளில் மக்கள் நடமாட்டம் குறைந்தது, கடைகள் மூடப்பட்டன.

முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து மினிபஸ், பஸ், இருபத்திஆறு கவசவாகனங்கள் என்பவற்றில் இவர்கள் வந்திருந்தனர். இராணுவத்தினர் அங்கு மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தின் போது மகேந்திரம் என்பவர் காயமடைந்தார். சில சைக்கிள்களின் மீது கவசவாகனங்கள் ஏற்றப்பட்டதினால் அவை சேதமடைந்தன.

நெடுங்கேணியிலுள்ள தேனீர்க் கடை ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன. மூன்று உழவு இயந்திரங்களும் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. படையினர் பின்னர் டொலர், கென்பண்ணைகளை நோக்கிச் சென்றனர்.

## 30 பீப்பா தார் கடத்தல்
## திருப்பித் தருமாறு வேண்டுகோள்!

வீதித் திருத்த வேலைகளுக்ெனக் கொண்டு வரப்பட்ட முப்பது பீப்பா தார் யாழ். புகையிரத நிலையத்திலிருந்து நேற்று இனந் தெரியாதவர்களால் கடத்திச்செல்லப்பட்டது.

இவற்றை யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறைக்குக் கொண்டு செல்வதற்காக லொறியில் ஏற்றிக் கொண்டிருந்த போதே இவை கடத்தப்பட்டன.

இன்றைய நிலையில் பெருஞ் சிரமத்தின் மத்தியிலேயே ஆவ்வாறு தார் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படுவதாகவும் இக் கடத்தல் காரணமாக இனிமேல இங்கு வீதித் திருத்த வேலைகளுக்காக தார் கொண்டு வர முடியாத நிலை ஏற்படலாம் எனவும் நெடுஞ்சாலைத் திணைக்கள பிரதம பொறியியலாளர் திரு. எஸ். எம். வி. திஸநாயகம் தெரிவித்தார்.

இன்று யாழ்ப்பாண வீதிகள் யாவும் மிகவும் மோசமாகப் பழுதடைந்துள்ளதால் இவற்றைத் திருத்தியமைக்கக் கூடிய வாறு தாரப் பீப்பாக்களை திருப்பித் தருமாறும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### யாழ் ஆஸ்பத்திரி...

கட்டுவன், விஜயகுமார்(25) சுண்ணாகம், சசிதரன்(19) தெல்லிப்பளை, வேலாயுதம் (35) யாழ்ப்பாணம், ஜெயக்குமார்(25) நீர்வேலி, மகாதேவா(22) வயாவிளான், அ சாக்குமார்(20) கீரிமலை, ரெனு(24) யாழ்ப்பாணம்

### இ அரச ...

வாதிகள் தாக்குவதற்கு திட்டமிட்டிருந்ததாகவும் அதனை ஆயுதப்படையினர் முறியடித்ததாகவும் அரசாங்கம் அறிவித்தது. இச்சம்பவத்தில் தெல்லிப்பளையிலுள்ள தீவிரவாதிகள் முகாமை படையினர் கண்டு பிடித்ததாகவும் அரசு அறிவித்தது.

### கோட்டை முகாம்....

தீர்வு காணப்படும் அதேவேளையில், பயங்கரவாதப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படும் என்றும் சொன்னார். யாழ்ப்பாண பாதுகாப்பு வலயப் பிரச்சினை தொடர்பாக யாழ் மக்கள் பிரதிநிதிகளுடன் பேசி சுமுகமாக முடிவுக்குவர அரசு தயார் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### 4-ம நாளாக ...

மன்னார் வீதி, வுனியா யாழ். கச்சேரிவீதி ஆகியவற்றில் முப்படைகளும் தமது சோதனைகளை நடத்தி வருகின்றது. முப்படைகளும் கூட்டாக நடத்தி வரும் சோதனை அதிகாலை ஆரம்பமாகி இரவு பத்து மணி வரை தொடர்ந்து நடைபெறுகிறது ஜீப், கவசவாகனம் முதலியவற்றை ஆங்காங்கே நிறுத்தி ஒவ்வொரு குழுவாகநின்று சோதனைகளை மேற்கொண்டு வருகின்றனர். ஒரு குழுவில் சுமார் நாற்பது பேர் வரையில் காணப்படுவதாகத் தெரியவந்துள்ளது.

### 9 பேர் பலி....

இச்சம்பவங்களில் மரணமானவர்களில் வயாவிளான் கருடுத் தொழிலாளியான சுப்பிரமணியம் கதிர்காமநாதன் (31), ஆறுமுகம் நமசிவாயம் (36), சின்னப்பு இராமன் (71), தையிட்டி கணேஸ்வரா வித்தியாலய அதிபர் திரு. எஸ். வரதராசப்பெருமாள், ஆரூர் செந்தில்குமாரி (24), சின்னத்தம்பி தபபிராசா (33), வாமதேவன் சாந்தன்(4) ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடைசி மூவரும் மயிலணிப் பகுதியில் பீரங்கித்தாக்குதலால் கொல்லப்பட்டவர்கள். இருசடலங்கள் அடையாளம் காணப்படவில்லை.

பீரங்கித் தாக்குதலில் இரு பனை மரங்கள் அடியோடு சரிந்தன பசுமாடு ஒன்றும் பலியானது. இருபதுக்கும் அதிகமான வீடுகள் சேதப்படுத்தப்பட்டன.

தெல்லிப்பளை ஆஸ்பத்திரியில் சி. அரிச்சந்திரா(34), ஜீ ரவி(22), சீரளன் தவமணி (29, கு. விஜயலட்சுமி(24), விஜயகுமார்(25), ஜோர்ஜ் (22) ஆகியோர் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சீருடையினருக்கும், போராளிகளுக்குமிடையே சுமார் ஐந்து மணிநேரம் மோதல் இடம்பெற்றதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆயிரக்கணக்கான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறி, அயல் கிராமங்களில் அடைக்கலம் புகுந்துள்ளார்கள். தெல்லிப்பளை ஆஸ்பத்திரிக்குள் சென்ற சீருடையினர் அங்கு பலரைப் பயமுறுத்தியதாகவும், பல பொருட்களைச் சேதப்படுத்தியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## வேலணை சம்பவம்

(மண்கும்பான், வேலணை நிருபர்கள்)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நேற்று வகுப்புகளுக்குள் புகுந்து துண்டுப் பிரசுரங்களை விநியோகித்த இளைஞரை இதன்மாணவர்கள் பிடித்து, பாடசாலை முன்பாகவுள்ள மின்கம்பத்துடன் கட்டி வைத்தனர். பின்னர் அவர் வேறு சிலரால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டார். பாடசாலை ஆசிரியரை இவர் தாக்கியதே இதற்குக் காரணமாம்.

### கொலை நடந்த....

தெரிவித்தார்.

"இராணுவம் போய் விட்டதென நினைத்த நானும் எனது பெருமகனும் கதிர்காமநாதனும் அவரது வீட்டிலிருந்து வீதியில வந்து எட்டிப் பார்த்தோம். வீதியில் சிவில் உடையுடன் நின்றவர்கள் எம்மை அழைத்தனர். சீருடையினருடன் வேறு இருவர் துப்பாக்கியை நீட்டியபடி எம்மை அழைத்தனர். நாம் நால்வர் இவ்வாறு அழைக்கப்பட்டோம் நாம் கிட்டச் சென்றவுடன் எமக்கு அடித்தார்கள். நீங்கள் புலிகளா? என்று, கொச்சைத் தமிழில் கேட்டார்கள். நாங்கள் இல்லையெனக் கூறினோம். கை எடுத்துக் கும்பிட்டோம். என்னை அடித்து இருத்தினார்கள்.

பெருமகன் கதிர்காமநாதனையும் மற்றும் இருவரையும் மூவர் அழைத்து முகாமிற்குச் சென்றனர். திரும்பவும் அவ்விடத்துக்குக்கொண்டுவந்தனர். தென் திசையில் ஒரு குண்டுச் சத்தம் கேட்டது உடன் எனது பெருமகனை அடித்தனர்; தள்ளி விழுத்தி சப்பாத்துக் காலால் உளக்கினர் அவன் கதறினான் குழறினான். ஒருவன் துவக்கால் நெஞ்சில் குத்தினான். ஒருவன் மாலைபோன்று ஏதோ ஒரு பொருளைக் கழுத்தில் தொங்கவிட்டு நின்றான் அவன் சைகைமட்டும் காட்டினான். கீழேகிடந்த கதிர்காமநாதனை எழுப்பி நிற்கவிட்டு நெற்றியில் சுட்டனர். உடன்சுருண்டு விழுந்த அவர் நிலத்தில் விழுந்தவாறு துடிப்பதை என் கண் முன் கண்டேன். உடையார் மகாதேவனும் சுடப்பட்டார். என்னையும்அழைத்தனர். நான் பயந்தபடி எழுந்தேன். என்னை போகும்படி கலைத்தனர். நான் வந்துவிட்டேன்! இவ்வாறு அவர் நடந்த கொடுமையான சம்பவத்தை தெரிவித்தார்.

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 24-01-86 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336

ஆணையாளர் சிவஞானம் அறிவிப்பு

# நகரமண்டபம், திறந்தவெளி பூங்கா, நூலகம் மாற்றமில்லை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் பூங்கா, திறந்த வெளியரங்கு, நூலகம், நகர மண்டபம் ஆகிய எதனையும் நல்லூருக்கு மாற்றும் திட்டம் எதுவும் கிடையாது என்று ஆணையாளர் திரு. சி வீ கே. சிவஞானம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:-

"யாழ் மாநகராட்சி மன்றத்தின் புதிய செயலகக் கட்டட அமைப்பைப் பார்வையிட்ட சிலர் பூங்கா, நூலகம், திறந்தவெளியரங்கு ஆகியவையும் இடம் மாற்றப்படுகின்றனவா என்று எம்மிடம் விசாரித்துள்ளனர். தயாரிக்கப்பட்ட மாதிரியின் படியும், வரைபடங்களின் படியும் இக் கட்டடம் முற்றுமுழுதாக சகல நிர்வாக, செயலகப் பகுதிகளை உள்ளடக்கிய மாநகராட்சி மன்ற செயலகமாகவே இருக்குமென்பதையும். இதில் நகர மண்டபம் உள்ளடக்கப்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். நகர மண்டபம் தொடர்ந்தும் முன்னைய இடத்திலேயே நவீன முறையில் அமைக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் காலப் போக்கில் எடுக்கப்படலாம்.

இது இவ்வாறிருக்க சுப்பிரமணியம் பூங்காவைக் கைவிட்டு அதற்குப் பதிலாக ஒரு பூங்காவை நல்லூரில் அமைப்பது என்ற எண்ணமே எமக்கில்லை. அதேபோல திறந்த வெளியரங்கையும் கைவிடுவதாகவோ அல்லது அதற்குப் பதிலாக ஒரு அரங்கை நல்லூரில் அமைப்பதாகவோ இத் திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. நூலகத்தைப் பொறுத்தவரை தற்பொழுது நல்லூரில் இயங்கும் கிளை நூலகத்திற்கு ஒரு நிரந்தரக் கட்டடம் அமைக்கப்படுமே தவிர அது பொது நூலகக் கட்டடத்திற்கு மாற்றுக் கட்டடமாக அமையாது என்பதையும் தெளிவுபடுத்த விரும்புகிறேன்" எனவும் தெரிவித்துள்ளார்.

## விடுவிக்க வேண்டுகோள்

முல்லைத்தீவில் கடத்திச் செல்லப்பட்ட பிரிட்டிஷ் பெண்மணியான பெனிலோப் வின்னியை விடுவிக்குமாறு கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் நேற்று அறிவித்தது.

இவரை மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்குமாறு கொழும்பு அதிமேற்றிராணியாரும் வேண்டியுள்ளார்.

### அரசாங்க அதிபர்....

பட்டிருந்தவர்கள் மத்தியில் அரச அதிபர் உள்ளே அனுமதிக்கப்பட்டது சரியா, பிழையா என்பது பற்றி பலத்த வாக்கு வாதம் இடம் பெற்றதைத் தொடர்ந்து முன்னணியின் இரு உறுப்பினர்கள் கச்சேரிக்குள் சென்று அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் உதவி அதிபர் திரு. எஸ். பீ. பாலசிங்கம் ஆகியோரையும், உள்ளே இருந்த முன்னணிப் பிரமுகர்களையும் வெளியே அழைத்து வந்தார்கள்.

வெளியே வந்த பின்னர் முன்னணியின் செயலாளர் திருமதி நிர்மலா பாலரட்ணம் அங்கு கூடியிருந்தவர்கள் மத்தியில் உரையாற்றுகையில், மகஜரை அரச அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்புவதற்காகவே அரசாங்க அதிபருடன் தாம் அலுவலகத்தினுள்ளே சென்றதாகக் கூறினார், கையளிக்கப்பட்ட மகஜரையும் அவர் வாசித்துக் காட்டினார்.

அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பதிலளித்து உரையாற்றுகையில், அன்னையர் முன்னணியினரால் தம்மிடம் கையளிக்கப்பட்ட மகஜரை உரிய இடத்திற்கு அனுப்பும் வேலையிலேயேதான் அலுவலகத்தினுள்ளே ஈடுபட்டிருந்ததாகவும், பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க அரைகுறையாகவே அதனை நிறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

தொழிற்சங்க கூட்டுக் குழுவின் செயலாளர் திரு. எஸ். விஜயானந்தன் உரையாற்றுகையில், எக்காரணம் கொண்டும் அரசாங்க அதிபரை உள்ளே செல்ல விடுவது உசிதமல்ல எனக் கூறினார்.

## நாளைய கூட்டம்

தமிழ்ப்பகுதிகளின் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுவினது முக்கிய கூட்டமொன்று நாளை சனிக்கிழமை காலை பத்து மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் நடைபெறவுள்ளது. பேராசிரியர் சிவத்தம்பி இக் கூட்டத்துக்குத் தலைமை தாங்குவார்.

### மூன்று இளைஞர்...

படையினரால் கைது செய்யப்பட்டுக் கோட்டை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ப. செல்வராசா, பி.மாமுனி, கி. சுவேந்திரன் ஆகிய மூன்று இளைஞர்களும் விடுதலை செய்யப்பட்டனர். கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் இராணுவ அதிகாரிகளுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்பட்ட முயற்சியினாலேயே இவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

### மாங்குளம்....

பொலிஸ் நிலையத்திலிருந்து தென்பகுதியிலுள்ள ஒருவரிடம் கொடுக்கும்படி லொறிச் சாரதியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது

மேற்படி லொறி யாழ்நகரிலுள்ள முஸ்லீம் போக்குவரத்து நிறுவனம் ஒன்றுக்குசொந்தமானது எனத் தெரிய வந்துள்ளது

### கல்விக் கந்தோர் .

தமிழ் மக்களை விடுவிக்க இராணுவத்தை வெளியேற்று!"

"சிறிலங்கா கொலை வெறி அரசே! அனைத்து இராணுவ முகாம்களை அகற்று! பாதுகாப்பு வலய சட்டத்தை உடன் வாபஸ் பெறு!"

"எம்மை வைத்தியசாலைக்கு சுதந்திரமாகப் போகவிடு!"

"எமது மண்ணில் எம்மை வாழவிடு!" போன்ற சுலோகங்கள் தொங்கவிடப்பட்டிருந்தன

கல்விக் கந்தோர் அமைந்திருக்கும் நல்லூர் செம்மணி வீதியில் கல்விக் கந்தோருக்கு முன்னால் வீதியின் இருமருங்கும் குறுக்கே கயிறு கட்டி எவரும் போக முடியாதவாறு தடை செய்யப்பட்டிருந்தது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தின் முன்னாலும் மறியல் செய்யப்படும் என அறிவிக்கப்பட்ட போதும் மறியல் நடைபெறவில்லை.